உ
சிவமயம்

# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

# HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

பிரதி விலை: சதம் 20.

ஆரம்பம் விரோதி ஹூ (1889) ஆவணி 28-ம் வ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீ., யாழ்ப்பாணம் தொலைபேசி: 356

புத் - ௯0] யாழ்ப்பாணம்- காலயுத்தி ஹூ ஆவணி மீ ௯ உ வெள்ளிக்கிழமை (25 8-1978) [இல-௧அ


# பெரியார்களுக்குள் அருமையானவர்



— திரு. சு. இ கனகநாயகம் அவர்கள் —

(தலைவர், சைவ வித்தியா விருத்திச் சங்கம்)

யார் பெரியார்? இந்தக் கேள்வியை எல்லோரும் கேட்கலாம். விடையளிக்கக்கூடியவர்கள் ஒரு சிலரே. சைவநூல்கள் யாவற்றிலும் பெரியவர்களாய் விளங்கினவர்களின் இலக்கணத்தைக் காணலாம். ஒன்றை மட்டும் இங்கே எடுத்துக்காட்டினுற் போதும்.

"செயற்கரிய செய்வர் பெரியார்' என்பது பொய்யாமொழி

இந்த அளவின்படி இந்நாட்டிலே பெரியார்கள் எவர்கள் இருந்தார்கள் என்பதை இலேசாக அறியலாம்

நாவலர் பெருமான், வன்னல் பொன். இராமநாதன் என்று இந்த வரிசையிருக்கின்றது.

இவ்வரிசையிலே சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை பெயருமுண்டு.

சைவம் காப்பது செயற்கரிய செயல். சைவங் காத்த பெரியார் இவர்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை நிறுவக காரணர்களாயிருந்தவர்களில் முன்னணியில் நின்றவர் இந்தச் சைவப்பெரியார்.

இரண்டு ஆண்டுகளாக இப்பெரியாரின் மாணவனாக இருந்த பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்ததைப் பற்றிப் பெருமைப்படுகிறேன்.

கேத்திர கணிதத்தில் சமபுய திரிகோணங்களைப் (Equilateral Triangles) பற்றி விளக்கம் கூறுவார்:- 'மீனவனுக்கு வலை பறி, தடி இன்றியமையாதது போல் சைவசித்தாந்தத்திலும் பதி, பசு, பாசம் ஆகிய இம்மூன்றுமே முத்தியடைவதற்கு வழியாகும்'' என்று வலியுறுத்துவார்.

ஆகவே, பெரியார்களுக்குள் இவர் அரியவர் என்று சுருங்கச் சொல்லி அவர்தம் நூற்றாண்டு விழாவையொட்டி எம் நன்றிக் கூற்றை அளிக்கின்றேன்

---

## தெல்லிநகர்த் துர்க்காதேவி ஆலயம்

# மகாவிழா ஆரம்பம்

### வருடாந்த மகோற்ஸவமும் தேர் வெள்ளோட்ட விழாவும்

நிகழும் காலயுத்தி ஆண்டு ஆவணித் திங்கள் பதினெட்டாம் நாள (3-9-78) ஞாயற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்ற வைபவம் நிகழ்ந்து தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் விழாக்கள் நடைபெற அம்பாள் திருவருள் கிடைத்துள்ளது.

**கொடியேற்றம்**

ஆவணி 18ஆம் நாள் (3-9-78) ஞாயிறு மு ப. 11 மணி

**தேர் வெள்ளோட்டம்**

ஆவணி 19ஆம் நாள் (4-9-78) திங்கள்

மு. ப 7-00 மணி வெள்ளோட்டக் கிரியைகள் ஆரம்பம்

மு. ப. 9-10 மணி கலசம் அணிதல்

மு. ப. 9-30 மணி பாராட்டு வைபவம்

1 கௌரவ ஸ்தபதி கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களுக்குப் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தல்

2 சித்திரத்தேரை உருவாக்கிய இரும்பசிட்டி கலாகேசரி கலையகச் சிற்பச் செல்வர்களுக்குக் கௌரவம் அளித்தல்

3 துர்க்கை அம்பாளுக்குக் கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பூசைசய்து வருகின்ற சிவஸ்ரீ ஞா. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தல்.

4 தேவகானசாகரம், நாதஸ்வர கலாநிதி திரு. என். கே. பதமநாதன் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தல்.

மு. ப. 10-30 மணி சித்திரத்தேர் வெள்ளோட்டம்

**சித்திரத்தேர் மலர் வெளியீடு**

ஆவணி 19ஆம் நாள் (4-9-78) திங்கள் மு. ப. 11-30 மணி

வெளியிட்டு வைப்பவர்: துர்க்காதுரந்தரி, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

வாழ்த்துரை: பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா

**இரதோர்ஸவம்**

ஆவணி 28ஆம் நாள் (13-9-78) புதன் காலை 9-30 மணி

**தீர்த்தோற்ஸவம்—கொடியிறக்கம்**

ஆவணி 29ஆம் நாள் (14-9-78) வியாழக்கிழமை

**வைரவர் பொங்கல்**

ஆவணி 30ஆம் நாள் (15-9-78) வெள்ளிக்கிழமை

---

## கோலாலம்பூர் சென்று திரும்பிய பண்ணிசைச் செல்வனுக்கு வரவேற்பு

-- கா. இரகுநாதன் --

மலேஷியா நாட்டுக்குச் சென்று பண்ணிசை நிகழ்ச்சிகளில் ஈடுபட்ட பண்ணிசைச் செல்வன் திருஞானசம்பந்தனுக்கு மீசாலை பக்தி நெறிக் கழகமும் கூட்டுப் பிரார்த்தனைச்சபையும் இணைந்து பாராட்டு விழா நடாத்திய பொழுது "பண்ணன் இசையாகி நிற்கும் இறைவனை நாளும் இன்னிசையால் நற்றமிழ்ப் பண் பாடிப் பணி புரிந்து மலேஷியாவில் வாழ்கின்ற சைவப் பெருமக்களைப் பகதிப் பரவசத்தில் ஆழ்த்தி, மகிழ்வித்துப் பாராட்டுகள் பல பெற்றுத் திரும்பிய பண்ணிசைச் செல்வன் தாவடியூர் திருஞானசம்பந்தன அவர்களை மீசாலை பக்தி நெறிக் கழகத்தினர் பாராட்டுவது மிகவும் பொருத்தமான தொன்றாகும். பண்ணிசைச் செல்வன்

வளர்ச்சி 3-ஆம் பக்கம்

---

சைவ பரிபாலன சபை
யாழ்ப்பாணம்

## சைவசமயபாடப் பரீட்சைக்குரிய 9ம் வகுப்புக்கான பாடத்திட்டம் - 78

1 சைவசமயத்தின் தொன்மை
2 சிந்துவெளி நாகரிகத்தில் சிவவணக்கம்
3 பன்னிரு திருமுறைகள்
4 சைவசித்தாந்த சாத்திரங்கள்
5 ஈழத்திற் சைவம்
(1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்
6 ஈழத்துச் சிவதலங்கள்
7 சைவ சாதனை
8 சிவாலய வழிபாடு
9 விரதங்கள்
10 சைவ நாற்பாதம்
11 திருவருட்பயன் அதி. 1—3
12 திருநீற்றுப் பதிகம் 1—5
13 திருகோணமலைப் பதிகம் 1-5
14 நமச்சிவாயப் பதிகம் 1—5
15 திருவெம்பாவை 5 பாடல்கள்
16 திருவிசைப்பா 1
17 திருப்பல்லாண்டு 1
18 திருமந்திரம் 1
19 திருப்புராணம 1
20 திருப்புகழ் 1
21 சமய குரவர், சந்தான குரவர் வரலாறு

கல்வித்திணைக்களத்தின் புதிய பாடத்திட்டப்படி சைவ பரிபாலன சபையார் வெளியிட்ட க. பொ. த. வகுப்பு சைவ சமய நெறி என்னும் நூல் பரீடசைக்கு மிக உதவியாகும்.

சி சிவரத்தினம்
பரீட்சைக் காரியதரிசி

சைவ பரிபாலன சபை,
450, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 356
20-8-78

---

## திருவிழா

காங்கேசன்துறை—ஆதி மயிலிட்டி, அருள்மிகு காசி பூகராமர் கோவில் வருடாந்தத் திருவிழா 22-8-78 செவ்வாயன்று ஆரம்பமாகி நடைபெற்று வரும் விழா எதிர்வரும் 15 9-78 வெள்ளிக்கிழமை நிகழும் திருவூஞ்சல் வைபவத்துடன் நிறைவுபெறும். தினமும் மாலை 6-30 மணிக்கு திருவிழா ஆரம்பமாகும். இந்நாட்களில் பண்ணிசை, சொற்பொழிவு, கதாப்பிரசங்கம் ஆதியாம் அருள் நிகழ்ச்சிகள் இடம்பெறும்,

---

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே!

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

காலயுத்தி ஞூ ஆவணி மீ கூ-உ வெள்ளி


## ஆவணித் திங்களில் ஆவன புரிவோம்

ஆவணி போற்றுதும், ஆவணி போற்றுதும் இரவி மூர்த்திக்குரியதால் என்று எண்ணும பொழுது "ஞாயிறு போற்றுதும்; ஞாயிறு போற்றுதும் மேரு வலம் திரிதலால்" என்ற சிலப்பதிகார அடிகள் சிந்தனையின் அடிப்படையில் இருக்கின்றன.

சூரிய வணக்கம் உயிரினம் யாவுக்கும் உதவுவதொன்று. ஒளியும் ஆற்றலும் கொடுக்கும் சக்தி கதிரவனுக்குண்டு. ஆதித்தனுக்குப் பொங்கல் செய்து வழிபடுவது சைவ ஒழுங்கு.

எனவே ஆவணி மாதம் எழில் மேவியதொன்றாக விளங்குகின்றது.

ஆவணி ஞாயிறென்றால் விசேட விரதகாலம் என்றே யாவரும் அநுட்டிப்பர்.

நாவலர் அவர்கள் சூரிய வழிபாட்டைப் பற்றிக் கூறியதைப் பார்ப்போம்:-

"சூரிய மண்டலத்தைத் தரிசித்து, வெண்டாமரைப் பூவின்மேலே, செவ்வொளியையுடைய வட்ட மண்டலத்தினடுவே உள்ளவராய, மாதுளம்பூ நிறத்தினராய், ஒரு திருமுகமும், இரண்டு திருக்கண்ணும், இரண்டு திருப்புயத்திலும் பொருந்திய அலர்ந்த வெண்டாமரைப் பூ காளம இரண்டு பிடித்த திருக்கையும் உடையவராய், சிவந்த வஸ்திரம் தரித்தவராயுள்ள சூரிய மூர்த்தியைத் தியானித்துச் 'சிவ சூரியாய நம' என்று செந்தாமரைப்பூ முதலிய செப்பூக்களைத் தூவித் தோத்திரம் பண்ணி இரண்டுதரம் ஆன்மப் பிரதக்ஷணம் செய்து 'வைகர்த்தனாய நம' முதலான பன்னிரண்டு திருநாமங்களைச் சொல்லிப் பன்னிரண்டு நமஸ்காரஞ் செய்து எழுந்து கும்பிட்டு விரும்பிய வரங்களை வேண்டிக் கொள்க."

இது நித்தியகருமம் ஆகவேண்டும் என்பதை நாவலர் ஐயா நன்கு புலப்படுத்தியிருக்கின்றனர்.

பழனங்களைப் பதன் செய்யும் உழவர்களும ஆவணி மாதத்தை நோக்கிய வண்ணம இருப்பர். வானம் வழங்கும் மாரிக்கு முன்னோடியாக ஆவணி மழை அமைவது இயற்கை.

திருச்செந்தூர், நல்லூர், செல்வச் சந்நிதி முதலிய திருத்தலங்களிலே ஆவணித் திங்களிலேயே தேர், தீர்த்த விழாக்கள் நடைபெறுவதனால் இரவி மாதத்துக்கு மேலும் சிறப்பு உண்டாகின்றது.

இலங்கையில் அரிதாய் அமைந்திருக்கும் தெலலி நகர்த் துர்க்கை ஆலயத்திலும ஆவணத் திருவோண நாளன்று தீர்த்த விழா நிகழ்வதையும் குறிப்பிடலாம்.

திருமணங்களுக்குரிய திங்களாக விளங்கும் பெருமையும் இந்த மாதத்துக்குண்டு.

இத்தகைய உத்தம வேளையில் மக்கள் தெய்வ வழிபாட்டில் மெய்யன்பாக ஈடுபட்டு உய்யும்வகையை உணர்ந்து இம்மைக்கும் மறுமைக்கும் பயனபடும் வண்ணம் நலலநெறியில் வாழ முயற்சித்தால் நாட்டில் அமைதி நிலவி மக்கள் நிம்மதி அடைவார்கள்.

## சைவப் பெரியார் உவமைகள்

### தாயினும் நல்ல . : .

ஒரு குழந்தைக்கு வேறு இனத்தவர்கள் நூறுபேர் இருந்தாலும், அதனுடைய தாய் அதைப் பார்ப்பது போல அவர்களெல்லாருங் கூடினாலும் அவ்வளவு அன்பாகப் பார்த்தல் முடியுமா? தாய் போன்ற ஒரு திரவியம் உண்டா? கடவுளோ பெற்ற தாயினும் பார்க்கக் கோடி பங்கு நம்மேல் அன்புள்ளவர்; பெற்ற தாய் இந்தப் பிறவியிலேயே மாத்திரம் நம்மைக் காப்பாள். அதிலும் இந்தப் பிறவி முழுவதும் காப்பாற்றும் வல்லமை அவளுக்கு இல்லை. கடவுளோ என்றால் எத்தனை கோடி பிறவி எடுத்தாலும் ஒவ்வொரு நிமிஷமும அன்பு பொழிந்து கொண்டிருக்கிறார் நாம பெற்றதாயை நேசிப்பதிலும பார்க்க எத்தனை கோடிபங்கு அதிகமாகக் கடவுளை நேசித்தல் வேண்டும்.

### ஒழுக்கம் தரும் விழுப்பம்

ஓர் அரசன் தன்னுடைய பகைவனோடு போர் செய்யத் தொடங்குதற்கு முன் தனக்குரிய கோட்டையைப் பெலப்பிப்பான்; பெலமான பீரங்கியை ஏற்றுவான்; சேனைகளுக்கு வேண்டும் ஆயுதங்களையும உணவையும் சேர்த்துவைப்பான். இப்படி வைத்துக் கொண்டு உள்ளே நின்று போரை நடத்துவான் ஆன்மாக்களாகிய நாம் நம்முடைய சீவியத்திலே ஆணவத்தோடு போர் செய்ய வேண்டியிருக்கிறது போர் செய்யத் தொடங்குமுன் சிவத் தியானத்தினாலே நமது மனமாகிய கோட்டையைப் பெலப்படுத்துகின்றோம். அவரை வணங்குவதினாலே நாம் பெறுகின்ற திருவருளாகிய பீரங்கிகளினால் ஆணவத்தின் சேனைகளாகிய ஆசைகளை அழிக்கின்றோம். இப்படி ஆணவத்தை வெல்லுவதே உண்மையான கடவுள்வழிபாடு. கடவுள் வழிபாடு என்று பொதுவாகச் சொல்லப்படும் சிவத்தியானம் முதலியவை ஆணவத்தை வெல்லுதற்காக உள்ள பிரதான கருவிகளாம். இப்படியான ஆயுதங்களைச் செய்துவிட்டு ஆணவத்தின் வழிப்பட்டுப் பாவஞ் செய்கிறவர்கள் கோட்டையைப் பெலப்பித்தல் முதலிய ஆயத்தங்களைச்செய்துவிட்டு, அவைகளைப் பிரயோசனப்படுத்தாமல் பகைவன் இருக்குமிடத்துக்குத் தனியே போய் அவனுடைய கையில் அகப்பட்டு மறியலாவாரைப் போல்வார்கள், ஆதலால சிவத்தியானம், சிவபூசை முதலியவைகளோடு நல்லொழுக்கமுஞ் சேர்ந்தால மாத்திரம அவை சரியான [illegible]

## கடவுள்நெறி சைவமென வகுத்த செம்மல்

பண்டிதர் செ. சிவப்பிரகாசம் அவர்கள்

வேதமெலாந் தழைத்தோங்க மிகுசைவந் தலைசிறக்க
காதல்மிகு மரண்பணியே தன்பணியைப் பணிகொள்ள
பூதலத்துப் புதுநூல்கள் புத்துரைகள் கட்டுரைகள்
வாதமிகு மாயவுரைகள் வளமமிகவே வழங்கினர். 1

சிவஞானந் தலைசிறக்கச் சிவனடியார்போல் வாழ்ந்தார்
பவமகலும் பண்பெல்லாம் பாங்குடனே பெற்றிருந்தார்
தவவாழ்வில் தலைநின்று தலைவனையே தாழ்ந்திருந்தார்
சிவனடியார் சீர்பரவுஞ் சிறப்பெல்லாகு செயதுவந்தார் 2

சைவத்தின் நுண்பொருளைத் தரணியெலாஞ் சாற்றினர்
கைவந்த கடவுள்நெறி சைவமென விறுவினர்
மெய்வந்த ஞானநலை மேதினிமேற் பரப்பினர்
தெய்வந்தான் சிவனெனவே தெளிந்துணர நாட்டினர். 3

இட்டமுட னிணையடியை இன்புடனே தொழுதமர்ந்தார்
தொட்டபணி அரனடியார் தொண்டெனவே வாழ்ந்துவந்தார்
தட்டமிட்டுக கூத்த நுந் தவநிலையில தலைநின்றா
அட்டனுரு முருகனுரு வாகுமநு பூதிபெறறார் 4

## உங்களுக்குத் தெரியுமா?

1 சமயக்கிரியைகள் செய்யப்படும்போது ஏன் தர்ப்பையினாலே மோதிரஞ் செய்து அணிந்துகொள்கிறோம்? ஓமகுண்டத்திலே நெருப்பை உண்டாக்கி, அதனுள்ளே நெய், பொரி, தேங்காய், சாதம் முதலியன இடப்படுகின்றனவே. ஏன்? பூரணாகுதி என்றால் என்ன? அது எங்ஙனம், ஏன் செய்யப்படுகின்றது? நவதானியங்கள் ஏன் முளைக்கப் போடப்படுகின்றன? வாஸ்து சாந்தி என்றால் என்ன? அது ஏன் எப்போது செய்யப்படுகின்றது?

2 தீக்ஷையின் பொருள் என்ன? தீக்ஷையிலே எத்தனை வகைகள் உண்டு? தீக்ஷையின் பலன்கள் யாவை?

3 விவாகக் கிரியையில் நிகழும் சங்கற்பம், பிள்ளையார் பூசை, புண்ணியாகம், பஞ்சகவ்வியம், அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், பிதுர் ஆசீர்வாதம், மணமகனுக்கு உபசாரம், கன்னிகா தானம், தாலி கட்டுதல், அக்கினி பூசை, ஏழடி வைத்தல், அம்மி மிதித்தல், அக்கினியை வலம் வருதல், அரசாணி முதலியன பற்றிய விளக்கங்கள் யாவை?

4 திருக்கோயிலின் தத்துவம் என்ன? தேவப் பிரதிட்டை எங்ஙனம் செய்யப்பட வேண்டும்? கொடியேறித் திருவிழா நடக்க முன்பு கிராம சாந்தி முதலியன நடைபெறுகின்றனவே; ஏன்? நவராத்திரி, விளக்கீடு, தீபாவலி முதலியவற்றின் விளக்கம் என்ன?

5 ஒருவர் இறந்தால் அவருடைய பிரேதத்திற்கு வீட்டிலும சுடலையிலும் செய்யப்படும் கிரியைகளின் விபரங்கள் என்ன? அந்தியேட்டி மண்டபம் எப்படி அமையவேண்டும்? அங்கே நிகழும் கிரியைகளின் கருத்தென்ன? அஸ்தி சஞ்சயனம் என்றால் என்ன? ஏகோதிட்டம், சபிண்டீகரணம்- இவை ஏன், எப்படி, எப்போ செய்யப்படுவன?

இவை முதலாய பல செய்திகளையும் விளக்கங்களையும் அறிந்துகொண்டு சைவக் கிரியைகளைப் பத்தி சிரத்தையோடு செய்து மகிழ்ச்சியடைய


வாசியுங்கள்

சைவப்பெரியார்

சு. சிவபாதசுந்தரம் B. A. அவர்கள்

இயற்றிய

**சைவக் கிரியை விளக்கம்**

விலை: ரூபா 5-00

விபரங்களுக்கு:

அதிபர், சைவப்பிரகாச அச்சியந்திரசாலை,
450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்;
தொலைபேசி: 356


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்பெரியாரின் மகிமையும் சைவத் தொண்டும்

— திரு. அ. சரவணமுத்து J. P., —

நாவலர் பெருமானின் பின் கல்வித் துறையிலும் சைவத் துறையிலும் அருந் தொண்டாற்றிய பெரியார்களுட் சிறந்தவர் உயர்திரு சு. சிவபாதசுந்தரனார் அவர்கள், பரமேஸ்வராக் கல்லூரி ஆரம்ப காலத்தில், 1922 ஆம் ஆண்டில் அக் கல்லூரிக்குத் தலைமை ஆசிரியராக கடமை புரிந்தார். அவருக்குக் கீழ் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்தக் காலத்தில் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மாணவர்கள் கல்லூரியிற் சேர்ந்தார்கள் தென் பகுதியிலிருந்து அனேக சிங்களப் பிள்ளைகள் கல்வி கற்றார்கள். கணிதம், தர்க்க சாஸ்திரம் படிப்பதில் மிகத் திறமைபூண்ட ஆசிரியராகச் சைவப் பெரியார் விளங்கினார். மாணவர்களின் மனதில் நன்கு பதியக்கூடிய வகையில் தெளிவாகவும் தர்க்க ரீதியிலும் விடயங்களை ஆராய்வார். இளைஞர்களுக்கு அவருடைய பாடங்கள் பெரும கவர்ச்சியை உண்டாக்கின அவரிடம கணிதம் பயின்ற மாணவர்கள் பலர் இன்றும் அரசாங்கத்திலும தனியார் துறையிலும் உயர்ந்த பதவிகளை வகிக்கின்றார்கள்.

சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இலகுவில் சிறுவர்கள் அறிந்து கொள்ளும்படி பல சமய நூல்களை எழுதியுள்ளார். ஒருகாலத்தில அவைகள் எல்லாச் சைவப் பாடசாலைகளிலும பாடப் புத்தகங்களாக அமைந்தன. தற்காலத்தில் அந் நூல்கள கல்லூரிகளில் பாவிக்கப்படாமலிருப்பது மிக வருந்தத்தக்கது. சில சைவப் பெரியார்கள் கொண்ட தூதுக்குழு ஒன்று கௌரவ கல்வி மந்திரி அவர்கள யாழ்ப்பாணம் வந்தபொழுது அவருடன் தொடர்பு கொண்டு அந்தச் சைவப்பெரியாரின் நூல்கள் பாடப் புத்தகங்களாக அமைய வேண்டுமென்னும அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்கள்

அவருடைய குண சீலங்கள் பல அதிகாரத் தொனியுடன பேசமாட்டார். மாணவர்கள் தங்கள் பிழைகளைத் தாங்களே உணர்ந்து சரியான வழியைப் பின்பற்றச் செய்வார். புலமை நிரம்பியமைந்த உள்ளம் "தன் பெருமை தானறியாத தலைமையர்" என்னும்படி வாழ்ந்தார்.

அவருக்குச் சகலவிதமான மாணவர்களும பயபக்தியுடன் கீழ்ப்படிந்து அவர்களுடைய புத்திமதிகளைக் கேட்டு ஒழுகுவராயினர்.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணக் கல்விப் பகுதிக்குத் தலைவராகக் கடமையாற்றிய சிறந்த கல்விமான் திரு H S. பெரேரா அவர்கள் இப் பெரியாரின் புலமையை நன்கறிந்து அடிக்கடி சந்தித்துக் கலவிவிடயங்களையும மனிதனின் உளப் பண்புகளையும் பற்றி தெரிந்து கொள்வார்கள். 'அகநூல' என்ற சிறந்த நூலொன்றை ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்கு பயன்படக் கூடியதாக எழுதியுள்ளார்.

அவருடைய சிறந்த சைவ சீல வாழ்க்கையைப் பின் பற்றி யாழ்ப்பாணத்தில் பல பாகங்களிலும் வசித்தார்கள், வசிக்கிறார்கள். அவர் நாட்டுக்குச் செய்த தொண்டுகள் அளப்பில. அப் பெரியாரின் நினைவு மங்காது, என்றும் நிலவும்.

சமயநெறி வாழ்க!

சைவம் வளர்க!!

## கோலாலம்பூர் சென்று

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

ஞானசம்பந்தனின் பண்ணிசைப் பெரும் பணி மேன்மேலும் சிறப்படைவதாகுக" என்று விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய சைவத்திருமணி, பண்ணிசை மாமணி, இசையரசு, சங்கீத பூஷணம், கல்வயல் திரு. எஸ் விநாசித்தம்பி அவர்கள் பாராட்டினர்.

சைவப்புலவர் கு. வி. மகாலிங்கசிவம் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழிசைக் கவிஞர் சங்கீத பூஷணம், சைவப்புலவர் தா. அ. கி. ஏரம்பமூர்த்தி அவர்கள் பண்ணிசைச் செல்வன் திருஞானசம்பந்தனுக்குப் பாராட்டுப் பாமாலை பாடிச் சூட்டினர்.

சாவகச்சேரி திவ்ய ஜீவன சங்கத் தலைவர் திரு இராஜரத்தினம (அதி

## சைவப் பெரியார் நூற்றாண்டு விழா

சைவப்பெரியார் நூற்றாண்டு விழா, கொழும்பு விவேகானந்தா சபையில 26-8-1978 சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் திரு. இரா. சபாநாயகம் அவர்கள் தலைமையில் நிகழும்.

திருவாளர்கள் கெ. கிருஷ்ணபிள்ளை, ஆ. குணநாயகம், இ. இரத்தினம், எஸ். வேலாயுதபிள்ளை, வீ. சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய நீதியரசர்) கி. லக்ஷ்மணன் ஆகியோர் நினைவுரை நிகழ்த்துவர்.

பர்), திரு. ச. கைலாயபிள்ளை, வித்துவான், சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்கள் உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினர் திரு. எஸ் ஆர் திருஞானசம்பந்தன குழுவினரின பண்ணிசை நிகழ்ச்சியும நடைபெற்றது.

## திறமை நிறை வைத்தியரும், இறைமை நிறை மனிதரும்

சென்ற வருடம் ஆவணிப் பௌர்ணமியில் சிவபதமடைந்த தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை முன்னை நாள் வைத்திய அதிகாரியும் "தேவ வைத்தியசாலை" உரிமையாளருமான வைத்திய கலாநிதி ச. பொன்னம்பலம் அவர்களின் சேவையைப் பாராட்டாதவர்கள் இல்லை ஒழுக்கத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய் வாழ்ந்தவரும், சிறந்த வைத்தியரும. சமூகத் தொண்டருமாகிய எங்கள் வைத்திய கலாநிதி அவர்களின் மறைவு எமக்கெல்லாம் ஈடு செய்ய முடியாத தொரு பேரிழப்பாகும்.

பல காலமாக அரசாங்க வைத்திய சேவையில் திறமையுடனும் மதிப்புடனும் பணி புரிந்த இவர் ஓய்வெடுத்தபின் வைத்திய கலாநிதிகள் சித்துலகொட புவபிள்ளை ஆகிய பெயர்பெற்ற வைத்தியர்களுடன சேர்ந்து பிரத்தியேக வைத்திய சேவையில ஈடுபட்டிருந்தார். இதன்பின் யாழ் நகரில் "தேவ வைத்தியசாலையைத்" தாமாக அமைத்துத் தொண்டாற்றிப் பிரபல்ய முற்றார். தன்னடக்கமும தயாள சிந்தையும் கொண்ட வைத்திய கலாநிதி அவர்கள் தன்னை நாடி வந்தோருக்கெல்லாம் திருப்திகரமாய சேவைசெய்து எல்லோர் அன்பையும தேடிக்கொண்டார். தந்தை செல்வா அவர்கள் இறுதியாகச் சுகவீனமுற்றிருந்த போது அவரின் உயிரை மீட்பதற்கான முயற்சியில மற்றைய வைத்தியர்களுடன் வைத்திய கலாநிதி பொன்னம்பலமும் முக்கிய பங்கை ஆற்றினார் இறைபதமடைவதற்கு முதல் நாள்கூட மோசமான தனது உடல்நிலையையும் பொருட்படுத்தாது வைத்திய சேவையிலீடுபட்டிருந்தார். அன்னாரின இறுதிச் சடங்கில் எல்லாத்தர மக்களும் அவரின் பிரிவு தாங்க இயலாது கணணீர் வடித்தமை அவரது கபடமற்ற சேவைக்குச் சான்றாகும்.

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவனான இவர் கல்லூரியில நடைபெறுகின்ற எந்த நிகழ்ச்சிகளிலும், கூட்டங்களிலும மிகுந்த ஆர்வத்துடன் பங்குகொள்ளுவார் கல்லூரியின் பழைய மாணவர் சங்க, பெற்றோர் ஆசிரியர் சங்க உப தலைவராக இருந்தார், அவர் வைத்தியத் துறையில் மாத்திரமன்றி மாணவ செல்வங்களின் எதிர்கால வாழ்க்கைக்கு ஒளியூட்டுபவராகவும் அவர்கள் வாழ்வில் உயர்வுக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். யாழ். திவ்விய ஜீவன சங்க ஈடுபாடு கொண்டிருந்த இவர் இலங்கைக் கல்வி கலை பண்பாட்டுக் காப்புக் கழகத் துணைத் தலைவராகவும் இருந்தார்.

இறைபக்தி நிறைந்த எங்கள் வைத்திய கலாநிதி அவர்கள் யோக சுவாமிகள் காலத்தில் சுவாமிகள் அன்பையும் அருளையும் பெறும் பாக்கியம் கொண்டிருந்தார், உடற் பிணிக்கு உற்ற மருந்தோடு தியானம் என்னும் திருமருந்தால் உளப்பிணியையும் போக்க முடியுமென்றுணர்ந்து அதைத் தன் வாழ்க்கையிலும் கடைப்பிடித்தார். நள்ளிரவு வணக்கத்தில் இவருக்கோர் அக்கறை,

'உனக்கு இரவு முனிக்குப்பகல் முனிக்கு இரவு உனக்குப்பகல்"

என்பது இதைப் பற்றி இவரின் தத்துவம். இறுதி நாட்களில் அவர் தன் பிள்ளைகளுக்குச் சில அறிவுரைகள் கூறிக் கொண்டிருந்தார். தேவி வழிபாட்டின் முக்கியத்துவம், முழுமையான தெய்வ நம்பிக்கை ஆகியவற்றை அவர்களுக்கு விளக்கிய அவர் சைவசமயத்தின் சில முக்கியமான அம்சங்களை அவர்களுக்குப் புகட்டினார் [illegible] இல புத்தகங்களை அவர்களுக்கு

அளித்தார். மறைவதற்கு முதல் நாளே மறுநாள் நடக்கப் போவதைக் குடும்பத்தினருக்குக் கூறினார்; எவரும் அவர் உயிர் நீப்பாரென்று நம்பினாரிலர், அவ்வளவுக்குத் தெளிவான அறிவுடன் காணப்பட்டார்.

வைத்திய கலாநிதி பொன்னம்பலம் அவர்கள் சிவபதமடைந்த 31-ம் நாள் யாழ். டேவிட் வீதியிலுள்ள அன்னார் இல்லத்தில் நடாத்தப்பட்ட அஞ்சலிக் கூட்டத்திற்கு எல்லாச் சாதி, சமய இன மக்க

ளும் வருகைதந்து அவருக்காகப் பிரார்த்தனையில் ஈடுபட்டமை 'அன்புக்குமுண்டோ அடைக்குந் தாழ்" என்பதன் நிரூபணமாக அமைந்தது.

கவிஞர்சிகாமணி, பிரம்மஸ்ரீ. கா. அப்பாச்சாமி அவர்கள் இயற்றிய

# நகுலகிரிப் புராண மூலமும்

இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு. செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் எழுதிய

உரையும்

# சிவபுராண படன விதி

(இது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களாற் பதிப்பிக்கப் பட்ட கந்தபுராண புத்தகத்திலிருந்து தொகுக்கப்பட்டது.)

(14-7-78 இதழ் முன் வளர்ச்சி)

9. சிவபுராண போதகரைச் சிவபெருமானைப் பாவியாது மனுஷராகப் பாவிப்போரும், சிவபுராணம் படிக்குஞ் சபையிலே உயர்ந்த ஆசனத்திருப்போரும், காலை நீட்டிக்கொண்டிருப்போரும், சயனிப்போரும், நித்திரை செய்வோரும், வெற்றிலை பாக்கு உண்போரும், உடம்பு போர்த்துக்கொள்வோரும், பிற வார்த்தைகளைப் பேசுவோரும், குதர்க்கஞ் செய்வோரும், பொறாமையினாலே பிறிது பொருளைக் கற்பிப்போரும், அன்பின்றிக் கேட்போரும், சிரிப்போரும், இடையில் எழுந்து பிறிது கருமத்திலே செல்வோரும, புராணத்தைப் பொய்யென்போரும். நெடுங் காலம் நரகங்களிலே கிடந்து துன்பம் அநுபவித்துப் பின்பு இழிவாகிய பிறப்புக்களிலே பிறந்து வருந்துவார்கள்.

10. சிவபுராணத்தை முதற்றொடங்கி முடிவு வரையும் இடைவிடாது நியமமாகக் கேட்டல் வேண்டும் தினந்தோறும் ஒவ்வொரு சிவபக்தருக்கு அன்னங் கொடுத்தல் வேண்டும் புராணம ஆரம்பித்த காலத்திலும், திருக்கல்யாணம முதலிய சுபசரித்திரங்கள் படித்த காலங்களினும, காண்டங்கள முடிந்த காலங்களினும், புராணம் முடிந்த காலத்தினும், சிவனடியார்களுக்கும், பிராமணர்களுக்கும இயன்ற மட்டும் அன்னதானம் செய்து, புராண போதகருக்குப் பூசை பண்ணி, வஸ்திரம், ஆபரணம் முதலியவை கொடுத்தல் வேண்டும். புராணம் முடிந்த பின் புராணத் திருமுறையையும், போதகரையும் மங்கல வாத்தியங்கள் ஒலிக்க வீதிவலம் செய்வித்தல் வேண்டும்.

### அணிந்துரை

பண்டிதர் இ. நமசிவாயம அவர்கள் உதவியது

உயிரவை வாழ நோற்கும் உமையவள் கான மன்றிற்
பயில்நட ராசர் வாமம் பார்வதி யமரப் பாரோர்
மயலறக் கோயில் கொண்ட மாண்பதி பலவ வற்றுள்
உயர்தலம் மூர்த்தி தீர்த்தந் தோங்கிய சிலவே யாகும். 1

அத்தகு பதிகள் தம்முள் ஆர்கலி வளைந்த ஈழத்
துத்தர திசையின் கண்ணே உவந்த லாச லத்தின்
சித்திரம் உலகு காணச் செய்தனன் ஓர்பு ராணம்
வித்தகன் அப்பா சாமி விப்பிரர் குலத்து தித்தான். 2

ஆசையா லவனு ரைத்த அப்புரா ணத்தை யன்பர்
நேசமோ டாடு தோறும் நியமமாய் நகுலேசர்முன்
பூசனை முறையி னோதிப் பொருளுரைத் துவப்பர் அன்னோர்
தேசுறும் அந்நூ லுக்குத் தெளிவுரை பெறுதல் வேண்டி. 3

சொற்பொருள் மயக்க றுத்துத் துணிபொருள் யாங்கள் காண
அற்புத னுரையிந் நூலுக் காக்கனை யளிக்க வென்னப்
பற்பகல் வேண்ட நஙரும் பணியிது தலைமேற் கொண்டு
பொற்புறு உரைசெய் தீந்த புண்ணியன் அவன்யா ரென்னில். 4

தெல்லியம் பதியின் மேற்பாற் றிகழ்விழி சிட்டி யூரான்
பலகலை பயின்று பள்ளித் தலைவனும் பணிபு ரிந்தான்
நல்லருள் நூலை யெல்லாம் நவின்றுநன் னெறியில் வாழ்வான்
மல்கெழிற் றிருவெண் ணீறே பொருளென மதிக்கும் மாண்பான். 5

சீர்பெறு புராண நூலின் தொகைபல சிறப்ப வாராய்ந்
தோர்பெற விசையி னோடும் எடுத்துரை யியம்ப வல்லான்
பார்புகழ் திடுதற் கேற்ற பண்பினன் ஆய மேன்மை
சேர்சிவ சுப்பிர மணியத் தீந்தமிழ்ச் செல்வன் என்க. 6

## இலவசம்

வீட்டுத் தோட்டம் செய்பவர்களுக்குக் கீரை விதைகளை யாழ்ப்பாணம் மில்க்வைற் தாபனத்தார் இலவசமாக வழங்குகின்றார்கள். தேவையுள்ளவர்கள் அவர்களோடு தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளும்படி கேட்கப்படுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

அம்மா என அலற ஆருயிரைக் கொன்றருந்தி
இம்மானுட ரெல்லாம் இன்புற் றிருக்கின்ருர்
அம்மா எனுஞ்சத்தம் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரயம் என்ருற், புசித்தவர்க்கென்
சொல்லுவதே

All these men (mea'-eaters) live self-satisfied eating the flesh of animals which cry aloud in great distress when killed. If even great ascetics who hear their cries of distress and get away (without interfering) are destined to suffer in hell, what, alas! will be the lot of those who taste and eat the flesh!

Hindu Organ

Friday, August, 25. 1978.

## A NAME FOR ALL TIME

'Ananda K. Coomaraswamy' — that is the remarkable name of one who is remembered throughout the world for his memorable contribution to lofty scholarship.

Our heart rejoices at the very mention of his impressive name not merely for the pride of place it occupies in literature of international import but also for the gift to the Saiva world of his scholarly comprehension of the science of art in the context of the Sacred Scriptures.

In the enlightening exposition of his understanding of the **Dance of Shiva**, the opening ideas couched in lucid language keep even the casual reader of his writings atttentive.

Says he,

"Amongst the greatest of the names of Shiva is Nadarajah, Lord of Dancers, or King of Actors. The Cosmos is His theatre, there are many different steps in His repertory, He Himself is actor and audience —

*When the Actor beateth the drum*
*Everybody cometh to see the show;*
*When the Actor collecteth the stage properties*
*He abideth alone in His happiness."*

In this momentous year of the Centenaries of the birth of our greatest sons, Navalar the Great, Saiva Periyar and Kala Yogi, naturally admirers, students and enthusiasts wish to observe the great occasion with all pomp and piety. But that is only one aspect of paying grateful tributes to their memory. What is more appropriate is a constructive scheme to enable the present generation seek the rich pages of the rare books written by these stalwarts of scholarliness for edification and enlightenment.

Let our strivings be worthy of the great occasion — the Centenary among Centenaries.

X X X

## Cultural Idol of Catholics

A simple tomb-and that is all. The funeral mass was "Pious and Simple".

The entire world has been moved by the reverence that marked a very notable event. Pope Paul VI has left behind a great religious tradition that has universal acceptance.

Simplicity and piety combined in splendid manner Everything Pope Paul VI did and dictated was extremely solemn.

Here was an idol of immeasurable value to the Catholics all the world over.

Other religionists hail him as a noble soul.

## Saiva Periyar Centenary Reproduction

## GLORIES OF SHAIVAISM

*By S. Shivapadasundaram* B A.

(continued from last issue)

The second step in worship is the consciousness of the infinite greatness of God and of my nothingness before Him. If I regard Him as the sun, I become a glow worm. Being nothing before Him. I cannot think of anything pertaining to myself I can think only of Him. I think of His endless Love, the Love that perform the Five Great Acts (ஐந்தொழில்) for the liberation of souls and for the granting of endless bliss to them I sing praises of Him. I offer Him flowers to the accompaniment of sacred mantrams. I lead a virtuous life. The best songs for praising God are these of our four great Saints, of Pattinathar and of Thayumanavar.

Worship thus consists of five steps or elements. The first of these is the freedom from feelings towards things of this world; the second is spiritual contemplation; the third is adoration; the fourth is the offering of mantric flowers and the fifth is the purification of the mind leading to a virtuous life. This is beautifully enumerated in a single stanza of Sivagnana Siddhiar:-

மனமது நினைய வாக்கு வழுத்தமந் திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுத லகற்றி வாழும் செயலற மானா லியார்க்கும்
முனமொரு தெய்வ மெங்குஞ் செயற்குமுன் இல்லை யன்றே.

This form of worship in which both the world and the self are ignored is adopted in the worship of Paramashivam.

In the worship of Parashakti, we contemplate not only God but ourselves also. It is Parashakti which unites us with God. We cannot therefore think of Her without introducing ourselves. Parashakti is His Love and the thought of Love must include two things. It is therefore essential that in this worship we give a place to ourselves too. This place cannot get beyond the thought of our being the loved ones of hers. She is the river of endless bliss which is of greater value to us than the mother's milk is to the child. She is, at present, our refuge. She is with us and joins us with God.

In the third form of worship, even the universe cannot be ignored. In this we contemplate the Adishakti (ஆதிசக்தி) which frees us from the rest of the universe viz Anava. Karma, and Maya. Anava has blinded us, does not allow us to see the truth and has practically taken possession of us It is Adishakti which is trying to give us sight, to show us the truth and liberate us from Anava. As Shivagnanabodham and Siddhiar well put it, the soul is in the hands of savages and believes itself to be a savage. God in his endless Mercy tells the soul that it is His child and takes it away from them. These three forms of worship find expression in the songs of our Saints. For example, in

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா ருர்பெறுவா ரச்சோவே

from beginning to சித்தமலமறுவித்து may be supposed to refer to Adishakti, சிவமாக்கி to Parashakti, எனையாண்ட அத்தன் to Paramashivam. The worshipper thus realises the God has endless love for him and responds to that Love by himself loving Him. That Love begets love is a matter of everyday experience. God's Love for me induces love for Him One requisite of love is acting as agreeably as possible to the lover. As a result of my love I obey His law as revealed in the Agama Just as in worldly affairs a thing that I like most comes to my mind at all times, the thought of God comes to me even when I am busy otherwise. We also see that the laws He made are for our own benefit, however unpleasant they may sometimes appear to be. Thus in obeying Him, our love for Him manifests itself and works for our everlasting welfare.

Though He loves us all in the same way we do not love Him with equal intensity. The Shivagamas have graded our love for God into servant - love, son - love, friend - love and identity-love and have prescribed different forms of worship to these four grades. These are respectively Charya, Kiriya, Yoga and Gnana.

(To be continued)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்

*Letter to the Editor*

### Mahatma Gandhi's Ideology

There are many people in Sri Lanka who respect Mahatma Gandhi and also wish to follow his teachings. Acharya Vinoba Bhave is considered to be a very devoted follower of Mahatma Gandhi and a holy person by himself. It is reported in the Press that the American Ambassador in India Mr. Robert F. Goheen called on the revered Acharya at the latter's Ashram very recently. It is also further reported as follows:

"During their conversation Acharya Bhave advised the Ambassador "To love each other, love your neighbour as thyself and love your enemy."

This profound advice is a restatement of Mahatma Gandhi's philosophy of life. It is also a repetition of the highest ideals of all religions.

It is earnestly trusted that the restatement of Achariya Bhave embodying their sublime ideals would influence the thoughts and actions of the people of Sri Lanka of all communities, creeds and political persuasions. It is in the fitness of things that our leaders, religious, lay and political would be graciously pleased to give us the ordinary people the appropriate lead.

S. SIVASUBRAMANIAM
103/2, Hulftsdorp Street,
Colombo 12.

உறுபசியும் ஓவாப் பிணியும்
செறுபகையும்
சேரா தியல்வது நாடு.

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, August 25, 1978.

[illegible] N. Sivapirakasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org